பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 15 | ஞாயிற்றுக்கிழமை | 31.12.2023 | அதிர்வு 152

### பதில் பொலிஸ்மா அதிபர்

## தென்னக்கோனுக்கு எதிராக 4 மனுக்கள்



தேசபந்து தென்னக்கோன் பதில் பொலிஸ்மா அதிபராகச் செயற்படுவதைத் தடுத்தும், அவர் பொலிஸ்மா 06▶

## வடக்கில் நான்கு நாள்கள் தங்கியிருந்து தொடர் சந்திப்புகளை நடத்தவுள்ள ரணில்



(ந.லோகதயாளன்)

புத்தாண்டில் நான்கு நாள் பயணமாக வடக்குக்கு வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தொடர் சந்திப்புகளில் ஈடுபடவுள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி மாலை 3 மணி முதல் 5.30 வரை மாவட்ட செயலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்குகொள்கின்றார். அன்று மாலை 7 மணி முதல் 9.30 வரை சிவில் சமூகப் பிரதிநிதிகளை அவர் சந்திக்கின்றார்.

5 ஆம் திகதி காலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும், மாலை 2 மணி தொடக்கம் 07▶

# ‘டீல்’ பேசி நாட்டுக்குள் வந்த கைப்பிள்ளை கஜேந்திரன்

### மக்களை உசுப்பேத்தி சுயலாப அரசியல் செய்கின்றார் என்று வவுனியாவில் அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு



(கி.வசந்தரூபன்)

**விடுதலைப்புலிகளிடம் 40 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று வெளிநாடு சென்றுவிட்டு, பின்னர் ஜனாதிபதியுடனும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடனும் டீல் பேசி நாட்டுக்குள் வந்த கைப்பிள்ளை கஜேந்திரன், மக்களை உசுப்பேற்றி சுயலாப அரசியல் செய்கின்றார் என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.** 07▶

# சுமார் 18 கோடி ரூபா பெறுமதியான 8 கிலோ தங்கத்துடன் ஒருவர் கைது

(ரஸீன் ரஸ்மின்)

சட்டவிரோதமான முறையில் சுமார் 18 கோடி ரூபா பெறுமதியான 8 கிலோகிராம் தங்கத்தை நாட்டிலிருந்து எடுத்துச் செல்ல முயன்ற நபரை இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் நேற்று கைது செய்துள்ளனர்.

இலங்கையின் உணவு வழங்கல் பிரிவில் கடமை புரியும் ஊழியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 35 வயதுடையவர் எனவும், அவரிடம் 7 கிலோ 700 கிராம் நிறையுடைய தங்கம் மற்றும் 66 தங்க பிஸ்கட்டுகள் காணப்பட்டன 06▶



## பதுளையில் மண்சரிவு அபாயம்!

### 201 பேர் வெளியேற்றம்



(ராமு தனராஜா)

பதுளை மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக பசறை, கனவரல்ல மவுஸ்ஸாகலை, மடுல்சீமை, டூமோ ஆகிய பகுதிகளில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் 67 குடும்பங்களைச் 07▶



வயது போய், மூப்பு வந்து, தளர்வு ஆரம்பிக்க... மனிதன் மீண்டும் குழந்தைப் பிள்ளையாகி விடுகின்றான் என்பது பொதுவான கணிப்பு.

அப்படித்தான் தமிழரசு மூத்த தலைவர்களின் நிலைமையும் என்பது என் சந்தேகம். துடிப்புடன் செயற்பட்ட நடிகர் விஜயகாந்த் கடைசி சில வருடங்கள் எப்படியானார், அவரை வைத்து எப்படி அரசியல் செய்தார்கள் என்பவை எல்லாம் 06▶

# மட்டக்களப்பு பெரியகல்லாறில் ஆற்றுவாய் வெட்டிவிடப்பட்டது

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவந்த பலத்த மழை நேற்று சற்று ஓய்ந்துள்ளது. எனினும், வெள்ள நீர் வழிந்தோட வழியின்றி கிராமங்களுக்குள்ளும், அங்குள்ள வீதிகள் மற்றும் வீடுகளுக்குள்ளும் தேங்கிக் கிடப்பதனால் மக்கள் தாங்கள் பலத்த அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு, பெரியகல்லாறு பகுதியில் அமைந்துள்ள ஆற்றுவாய் வெட்டிவிடப்படும் பட்சத்தில் மிக விரைவாக வெள்ள நீர் வழிந்தோடுவதற்குரிய வாய்ப்புக்கள் உள்ளன என அப்பகுதி மக்கள் குறிப்பாக, மீனவர்கள், விவசாயிகள் மட்டக்களப்பு மாவட்ட இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதற்கிணங்க, இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் நீர்ப்பாசன திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் எந்திரி ந.நாகரெத்தினத்துக்கு வழங்கிய ஆலோசனைக்கமைய நேற்று சனிக்கிழமை காலை பெரியகல்லாறில் அமைந்துள்ள முகத்துவாரம் (ஆற்றுவாய்) பெக்கோ இயந்திரத்தின் மூலம் அகழப்பட்டு, வெள்ள நீரை கடலுக்குள் அனுப்பும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆற்றுவாய் வெட்டும் பணி இடம்பெறும் இடத்துக்கு இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் பிரதிநிதியாக அவரது செயலாளர் பூ.பிரசாந்தன், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் எந்திரி ந.நாகரெத்தினம், நவகிரி பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் சு.கிசோகாந்த் மற்றும் மீனவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் சென்று பார்வையிட்டனர்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இம்மாதத்தில் 10 ஆயிரத்துக்கும் அதிகம்

இந்த மாதத்தில் மாத்திரம் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த மாதத்தில் 10 ஆயிரத்து 600 புதிய டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலேயே அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, மேல் மாகாணத்தில் 39 ஆயிரத்து 543 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதன்படி, கம்பஹா மாவட்டத்தில் 18 ஆயிரத்து 401 டெங்கு நோயாளர்களும், கொழும்பு மாவட்டத்தில் 16 ஆயிரத்து 20 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 5 ஆயிரத்து 122 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 87 ஆயிரத்து 78 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.




இதற்கிடையில், மொத்தமாக 62 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் அதிக ஆபத்து மிகுந்த டெங்கு பரவல் வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

# 2 லட்சம் சுற்றுலாப் பயணிகள் டிசம்பரில் நாட்டுக்கு வருகை



இந்த வருடத்தின் டிசம்பர் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 2 லட்சம் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த 4 மாதங்களுடன் ஒப்பிடுகையில் மாதம் ஒன்றில் பதிவான அதிக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இதுவாகும்.

அத்துடன், இந்த ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.5 மில்லியனாக பதிவாகலாம் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# கொழும்பு ஆஸ்பத்திரியில் சர்ச்சைக்குரிய உயிரிழப்பு

## விசாரணைக்கு அமைச்சர் உத்தரவு



கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்காக வந்த நோயாளர் ஒருவருக்கு ஒக்ஸிஜனுக்கு பதிலாக கார்பனீராக்சைடு வழங்கப்பட்டு அவர் உயிரிழந்திருந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை அறிக்கையை சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன, வைத்தியசாலை பணிப்பாளரிடம் கோரியுள்ளார்.

நுகேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய திருமணமாகாத பெண்ணொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மார்பகம் தொடர்பான சத்திர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில், அவர் மூச்சு திணறல் ஏற்பட்டு உயிரிழந்திருந்தார்.

அவருக்கு ஒக்ஸிஜனுக்கு பதிலாக கார்பனீராக்சைடு கொடுக்கப்பட்டதால் மூச்சு திணறல் ஏற்பட்டு இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனக் கூறப்பட்டது. இந்நிலையிலேயே இது தொடர்பிலான உடனடி விசாரணைக்கு சுகாதார அமைச்சர் பணித்துள்ளார்.

# ஜனவரி இரண்டாம் வாரத்தில் இலங்கை வருகின்றார் விஜய்!



தென்னிந்திய பிரபல நடிகரான இளைய தளபதி விஜய், தனது 68 ஆவது படத்தின் படப்பிடிப்பிற்காக இலங்கைக்கு வரவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

"லியோ" படத்தின் வெற்றிக்குப் பின்னர், விஜய் தனது அடுத்த படத்திற்காக இயக்குனர் வெங்கட் பிரபுவுடன் இணைந்துள்ளார். படப்பிடிப்பும் விறுவிறுப்பாக நடந்து வருகின்றது.

இந்தப் படத்தின் ஹைதராபாத் ஷெட்யூல் முடிவடைந்துள்ளது. படத்தின் இந்த ஷெட்யூலுக்காக இயக்குனர் வெங்கட் பிரபு முக்கிய நடிகர்களை ஒருங்கிணைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்ட நேரத்திற்கு முன்பே படப்பிடிப்பு முடிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் படக் குழு தங்கள் குடும்பங்களுடன் புத்தாண்டுக்காக ஓய்வு எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், "தளபதி 68" படத்தின் அடுத்த ஷெட்யூல் இலங்கையில் இடம்பெறும் எனவும், ஜனவரி இரண்டாவது வாரத்தில் படப்பிடிப்புகள் தொடங்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில், "தளபதி 68" படத்தின்பர்ஸ்ட்லுக்மற்றும்தலைப்புவிரைவில் வெளியிடப்படும் என்று கூறப்படுகிறது.

இப்படத்திற்கு 'G.O.A.T.' (Greatest One Across Times) என்று பெய ரிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதிகாரப்பூர்வ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

"தளபதி 68" ஒரு டைம் ட்ராவல் படம் என்று கூறப்படுகிறது, இதில் விஜய் இரட்டை வேடத்தில் நடிக்கிறார் எனவும் கூறப்படுகின்றது. மேலும் பல நட்சத்திரங்கள் படத்தில் வலுவான கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளனர்.

இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார் என்பதுடன் கல்பாத்தி எஸ்.அகோரம் படத்தை தயாரிக்கின்றார்.

---

## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



### "தாயகஒலி" பிரதம ஆசிரியர்

***தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)***

**(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு**

நடத்தும்

## சிறுகதைப் போட்டி

**இருபிரிவுகளாக நடத்தப்படும்**

**(பரிசுத் தொகை 1 இலட்சம்)**

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.
* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

***அனுப்ப வேண்டிய முகவரி :***

இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தயார்படுத்தல்களை முன்னெடுத்துள்ளேன்



## தம்மிக்க பெரேரா தெரிவிப்பு

"அடுத்த வருடத்தில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆரம்பக்கட்டத் தயார்படுத்தல்களை முன்னெடுத்து வருகின்றேன்."

– இவ்வாறு பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடத் தயாராக உள்ளேன். எனினும், ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினால் 10 நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்களை தனியாருக்கு வழங்குவதைத் தவிர்த்தல், பொதுமக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வற் வரிச் சுமையை குறைத்தல் ஆகியவை அந்த 10 நிபந்தனைகளுக்குள் உள்ளடங்குகின்றன.

இந்தநிலையில், 5 வருடங்கள் ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்கும் போது, திட்டமிட்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதன்படி, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை அறிவிப்பதற்கு இன்னும் 286 நாட்கள் உள்ளன.

அதற்கிடையில், அந்த 10 நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட நான் எதிர்பார்க்கின்றேன்."

– என்றார்.



# ஆறுகளின் நீர்மட்டம் உயருகின்றது நீர்பாசனத் திணைக்களம் அறிவிப்பு

ஆறுகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக நீர்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, மகாவலி கங்கை மற்றும் மாணிக்க கங்கை ஆகியற்றின் நீர்மட்டங்கள் அதிகரித்து வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆறுகளை அண்மித்த தாழ்நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ளம் குறித்து எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மடுல்சீமை விரலிபத்தன பகுதியில் மண்சரிவு ஏற்படுவதற்கான சாத்தியம் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு ஏற்படுவதற்கான சாத்தியம் நிலவுவதனால், மேற்படி பகுதியில் வசிக்கும் 49 குடும்பங்களை சேர்ந்த 154 பேர் அந்தப் பகுதியில் உள்ள பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அனர்த்தம் காரணமாக கடமைக்கு வராத அரச ஊழியர்களுக்கு விசேட விடுமுறை



அனர்த்தங்கள் காரணமாக கடமைக்கு சமுகமளிக்க முடியாது போன அரச ஊழியர்களுக்கு அந்த நாள்களுக்கு விசேட விடுமுறையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2023 செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இந்த விடுமுறை வழங்கப்படவுள்ளது.

நாட்டின் பல்வேறு மாகாணங்களில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு மற்றும் போக்குவரத்துப் பாதிப்பு ஆகியன காரணமாக தமது கடமைகளுக்கு சமுகமளிக்க முடியாத அரச உத்தியோகத்தர்கள் இந்த விசேட விடுமுறையைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாக அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்கள் தாம் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள கிராம அதிகாரியின் பரிந்துரையுடன் கூடிய விடுமுறைக் கோரிக்கையை, நிறுவன தலைவர்களுக்கு அனுப்பி, விண்ணப்பிக்க வேண்டுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முந்தலில் இரு கார்கள் மோதி விபத்து 3 சிறுவர் உட்பட 9 பேருக்குக் காயம்









(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – கொழும்பு பிரதான வீதியின் முந்தல் பிரதேச செயலகத்திற்கு முன்னால் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் 09 பேர் காயமடைந்துள்ளனர்.

புத்தளம் பகுதியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற காரும், நீர்கொழும்பு பகுதியில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணம் செய்த மற்றுமொரு காரும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் இரு கார்களிலும் பயணித்த மூன்று சிறுவர்கள் உட்பட 09 பேர் காயமடைந்த நிலையில் முந்தல் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமையுடன், அதில் எட்டு பேர் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் , ஒருவர் முந்தல் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் முந்தல் பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தின் போது இரண்டு சொகுசு கார்களும் சேதமடைந்துள்ளன.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நமக்குத் தெரிந்தவைதான்.

தமிழரசுக் கட்சி தொடர்பில் சம்பந்தனின் ஒப்பத்துடன் வழமைக்கு மாறாக, மிக நீண்ட அளவில் வந்துள்ள கடிதம் மற்றும் சம்பந்தனின் பெயரால் கட்சிக்குள் அரங்கேறும் சில செயற்பாடுகள் சம்பந்தனை வைத்து ஒரு தரப்பு இயக்குவதான சந்தேகத்தையே தந்து நிற்கின்றன.

கட்சியின் தலைவர்கள் எல்லோரும் ஒன்றாக அடுத்த பத்து நாள்களில் சம்பந்தனை அவரின் இல்லத்தில் நேரில் சந்திக்கும்போது பல உண்மைகள் வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.

கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் திருகோணமலையில் நடந்தது என்றால் அதை எனக்கு ஏன் அறிவிக்கவில்லை என்றும் சம்பந்தன் கேட்டாராம். நல்ல கேள்விதான். ஏதோ அறிவித்திருந்தால் சம்பந்தன் அந்த கூட்டத்திற்காக திருகோணமலைக்கு வந்திருப்பாரா என்ற மறு கேள்வி வேறு விடயம்.

ஆனால், அதற்கு முன்னர் அந்தக் கூட்டத்தை சம்பந்தனின் கொழும்பு வீட்டில் நடத்தத்தானே கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா முயன்றார்...? அதற்காக சம்பந்தனை மாவை சேனாதிராஜா தொடர்பு கொண்ட போது, தான் ஆஸ்பத்திரியில் இருப்பதால் கூட்டத்தைத் தமது வீட்டில் நடத்த முடியாது என்ற பதில்தானே சம்பந்தன் தரப்பிலிருந்து மாவைக்கு வழங்கப்பட்டது...? அப்படி பதில் அனுப்பியவர் இப்போது திருகோணமலைக் கூட்டத்திற்கு ஏன் தம்மை அழைக்கவில்லை என்று கேட்கின்றாராம். ஆனால், கேள்வி நியாயம்தான்.

கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவோ, ட்யூன் பார்த்து பாட்டிசைகின்றார் என்று தகவல்.

மாநாட்டை எப்படியும் திட்டமிட்ட திகதியில் நடத்தி முடிக்க வேண்டும் என்ற கருத்துடையவர்களுடன் எப்படியும் மாநாட்டை அந்த நாளில் நடத்தி முடித்தாக வேண்டும் என்ற மாதிரிப் பேசுகின்றார். பொதுக்குழுவில் பங்கு பற்றுவதற்கு தொகுதி ரீதியாக நடைபெற்ற தெரிவுகள் பிழை, ஆகவே அவற்றையெல்லாம் திருத்திய பின்னர் ஆறுதலாகக் கட்சி மாநாட்டை நடத்தலாம் என்ற கருத்துடையவர்களுடன் அந்த ட்யூனில் கதைக்கிறார்.

அதனால்தான் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தோற்றுவிடுவார் என்று நேற்றுக் குறிப்பிட்டேன்.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல, கட்சி இரண்டுபட்டு, மாநாடு நடத்தப்படாமல் இழுபட்டால் யாருக்கு கொண்டாட்டம், யார் பதவியில் நீடிப்பார்கள் என்பவை எல்லாம் நான் கூறத் தேவையில்லை. வாசகர்களுக்கே நன்கு தெரியும்.

அப்படி நன்மையடைய விரும்புபவர்கள், அதற்காக சர்ச்சைகளை ஊதி பெருப்பிக்க இடம் அளித்து நிற்கின்றனர் – முடிவு செய்து தீர்ப்பளிக்கும் அதிகாரம் தங்களிடமிருந்தும், அதை உறுதியாகச் செய்யாமல். பதவியில் நீடிக்கும் ஆசை தான் அதற்கும் காரணம்.

எது,எப்படிஎன்றாலும்கட்சியின்அடுத்த அரசியல் குழு கூட்டம் சம்பந்தனின் இல்லத்தில் நடக்குமானால் பலருக்கு செம அர்ச்சனைக்கு இடம் இருக்கும் என்றே தோன்றுகின்றது. கடைசிக் காலத்தில் இப்படி எல்லாம் அனுபவம் பெற நேரிட்டதே என்று சிலர் கவலைப்படும் சந்தர்ப்பங்கள் கூட இடம்பெறலாம்.

கடைசியாக ஒரு கொசுறுத் தகவல்:–

கட்சித் தலைமைக்கு போட்டியிடும் ஒருவர் கூட மாநாட்டு ஒழுங்குமுறைகள், தேர்வு ஏற்பாடுகள், விதிமுறைகள் குறித்து ஆட்சேபக் கடிதம் ஒன்றைக் கட்சித் தலைமைக்கு அனுப்பி வைத்திருக்கிறாராம். ஆனால், அது மாநாட்டை ஒத்திவைக்க வேண்டும் எனக் கோரும் கடிதம் அல்ல என்கிறார் அவர்.

ஆனால் மாநாட்டை ஒத்திவைக்கும் கட்டாயம் இருப்பதாக சிலருக்கு தகவல் சொல்லி இருக்கும் கட்சித் தலைவரோ, அதற்கான காரணங்களில் ஒன்றாக அந்தக் கடிதத்தையும் தலைமைக்கான அந்த வேட்பாளரின் நிலைப்பாட்டையும் சில தரப்புகளுக்கு முன் வைக்கிறார்.

கடவுளே! தமிழரசுக் கட்சியை நீதான் காப்பாற்ற வேண்டும்...!

## சுமார் 18 கோடி ரூபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எனவும் இலங்கை சுங்கத்தின் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட சுங்கப் பணிப்பாளருமான சிவலி அருக்கொட தெரிவித்தார்.

சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப் பட்ட தங்கத்தின் பெறுமதி 17 கோடி 60 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்டது என மதிப்பிடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் சுங்கப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## தென்னக்கோனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதிபராகப் பதவியேற்பதைத் தடுக்கும் உத்தரவைக் கோரியும் நான்கு அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித், உண்மை மற்றும் நீதிக்கான சட்டத்தரணிகள் அமைப்பு, ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மூவர் மற்றும் காலிமுகத்திடல் போராட்டக்காரர் ஆகியோர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுக்களில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், அரசமைப்புச் சபை மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின்போது மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த தேசபந்து தென்னக்கோன் தனது கடமைகளை மீறியிருந்தார் என்று மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் செயற்பட்ட காலத்தில், காலிமுகத்திடலில் தங்கியிருந்த போராட்டக்காரர்கள் கொடூரமான முறையில் தாக்கப்பட்டதையும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால், நாட்டின் சட்டத்தை அமுல்படுத்தும் முக்கிய துறையைக் கையாளும் பொறுப்பு, மனித நேயமுள்ள ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், அதற்கு முரணாகச் செயற்பட்ட ஒருவருக்கு இந்தப் பொறுப்பை வழங்குவது அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்றும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தம்பியை மண்வெட்டியால் தாக்கி கொலை செய்த அண்ணன் கைது

அநுராதபுரம், கல்னெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் இடம்பெற்ற மோதலில் இளைய சகோதரனை மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்த மூத்த சகோதரன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் அவுக்கண பிரதேசத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான லலித் சந்திரகுமார என்ற 46 வயதுடைய முன்னாள் கடற்படைச் சிப்பாய் ஆவார்.

இவர் கடற்படை முகாமில் கடமையாற்றும் காலத்தில் இடம்பெற்ற விபத்தில் ஊனமுற்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இந்நிலையில், இரு சகோதரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், மூத்த சகோதரன் இளைய சகோதரனின் தலையில் மண்வெட்டியால் தாக்கியுள்ளார்.

இதில் காயமடைந்து தரையில் வீழ்ந்த வரை மூத்த சகோதரன் மீண்டும் பல மாகத் தாக்கிக் கொலை செய்துள்ளார்.

கொலையாளியான மூத்த சகோதரன் சம்பவ இடத்தை விட்டுத் தப்பிச் செல்ல முற்பட்டபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்னெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 'டீல்' பேசி நாட்டுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

வவுனியாவுக்கு நேற்று விஜயம் செய்த அவர், கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், தானாகவே கைப்பிள்ளை கஜேந்திரன் எம்.பி. தொடர்பாகக் கேளுங்கள் எனக் கூறி தானாகவே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"அந்தக் காலத்தில் கைப்பிள்ளை கஜேந்திரன், 40 ஆயிரம் சவப்பெட்டிகளைத் தயார் செய்யுங்கள் என்று நாடாளுமன்றில் கூறினார். அந்த விடயம் சிங்கள மக்களிடத்திலும், ஆயுதம் தரித்தவர்கள் மத்தியிலும் ஒரு கொதிநிலையை ஏற்படுத்தக்கூடியது. அவர் அவ்வாறு கூறிவிட்டு வெளிநாடு சென்றுவிட்டார்.

பின்னர் அந்தக் காலப்பகுதியில் பதவி வகித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியுடன் டீல் பேசினார். தன்னிடம் பல இரகசியங்கள் இருக்கின்றன, அதனை நான் சொல்லுகின்றேன், எனது சகோதரரை விடுவியுங்கள் என்று அவர் கோரினார். பின்னரே அவர் இலங்கை வந்தார்.

அவர் வெளிநாடு செல்வதற்கு முன்பாக புலிகள் அமைப்பில் வாகனங்களுக்குப் பொறுப்பாக இருந்த குட்டி என்பவர் நாடாளுமன்றில் அவருக்குக் கொடுத்த வாகனத்தைத் தருமாறு கேட்டிருந்தார். அதற்கு 40 இலட்சம் ரூபா பணத்தை நாடாளுமன்றத்துக்குச் செலுத்தினாலேயே அந்த வாகனத்தை எடுக்க முடியும் என்று கைப்பிள்ளை கூற குட்டி என்பவர் அந்தப் பணத்தை அனுப்பியிருந்தார்.

அந்தப் பணத்தையும் கைப்பிள்ளை எடுத்துக்கொண்டு வாகனத்தைப் பூட்டிவிட்ட பின்னரே வெளிநாடு சென்றார். பின்னர் மீண்டும் இங்கு வந்து மணற்தரை என்ற பகுதியில் காணி வாங்கி வீடு கட்டி வசதியாக இருக்கின்றார். இவர்கள் மக்களுடைய நலன்களையும் கருத்தில்கொள்ள வேண்டும். இவ்வாறானவர்கள் மக்களுக்குத் தவறான வழிகாட்டல்களை வழங்கி மக்களை உசுப்பேற்றுகின்றார்கள். இவை ஆரோக்கியமான விடயமல்ல.

இதேநேரம் எங்களுக்குப் பயந்தே வெளிநாடு ஓடியதாக அண்மையில் அவர் கூறியிருந்தார். இன்று நான் இருக்கின்றேன். ஆனால், அவர் யாருக்குப் பயத்தில் ஓடினாரோ அவர்கள் இன்று இல்லை. இன்று புலிகள் இல்லை நான் இருக்கின்றேன். அப்படியானால் யாருக்குப் பயந்து அவர் ஓடியிருக்க முடியும்.?

அந்தக் காலகட்டத்தில் வெலிக்கடை சிறையில் சிங்களக் காடையர்களாலும், களுத்துறை சிறையில் தமிழ் காடையர்களாலும் நான் தாக்கப்பட்டேன். ஆனால், நானும் திரும்பித் தாக்கினேனே தவிர நாட்டைவிட்டு ஓடவில்லை.

ஆனால், இந்தக் கைப்பிள்ளை திருகோணமலை மக்களை உசுப்பேற்றி குழப்பினார். அந்த மக்கள் அடிச்சுத் துரத்தியபோது ஓடியதை அனைவரும் வீடியோவில் பார்த்திருப்பீர்கள். அவர் கோழை போல் ஓடினார். அவர் திரும்பத் தாக்கியிருக்க வேண்டும். அந்தச் சம்பவத்துக்கு மனம் வருத்துகின்றேன். ஆனால், அவர் மீண்டும் தாக்கியிருக்கவேண்டும். அதற்கு முதுகெலும்பில்லாத தைரியம் இல்லாதவர்கள் இன்று சகட்டுமேனிக்கு ஏதோ பேசுகின்றனர்." - என்றார்.

## பதுளையில் மண்சரிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 201 பேர் அந்தப் பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பதுளை மாவட்ட அனர்த்த நிவாரண சேவை அதிகாரி சஞ்சீவ சமரகோன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி பசறை, கனவரல்ல பகுதிகளைச் சேர்ந்த 18 குடும்பங்கள் (50 பேர்) கனவரல்ல இலக்கம் 3 தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளன. அத்துடன், மடுல்சீமை, டுமோ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 49 குடும்பங்கள் (151 பேர்) கல்லுல்ல தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கான உணவு, மருத்துவ வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு லுணுகலை மற்றும் பசறை பிரதேச செயலக செயலாளர்களின் ஆலோசனையுடன் கிராம சேவகர் மற்றும் அனர்த்த நிவாரண சேவை அதிகாரி ஆகியோருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மண்சரிவு அபாயம் காரணமாக தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு இரவு நேரங்களில் பாதுகாப்புக்குப் பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்த சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பதுளை மாவட்ட அனர்த்த நிவாரண சேவை அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கில் நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

3 மணி வரையில் பூநகரிப் பிரதேச அபிவிருத்தி மற்றும் நகர மயமாக்கல் தொடர்பில் பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலிலும் அவர் கலந்துகொள்கின்றார்.

6 ஆம் திகதி காலை 9 மணி முதல் 10 மணி வரையில் யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்ப்பாணம், வவுனியா பல்கலைக்கழக உப வேந்தர்கள் மற்றும் கிளிநொச்சி வளாகப் பீடாதிபதி உள்ளிட்ட விரவுரையாளர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்து 10 மணிமுதல் 11.30 வரையில் சர்வமதப் பிரதிநிதிகள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தின் பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்திக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி தலைமையில் மாலை 3 மணி முதல் 5 மணி வரை யாழ். மாவட்ட செயலகத்தில் நிபுணர்களுடனான சந்திப்பும், 7 ஆம் திகதி தந்தை செல்வா மண்டபத்தில் பனை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான சந்திப்பும் இடம்பெறவுள்ளது.



Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரசியல் சகுனி பஸிலின் நகர்வுகள்

இலங்கை அரசியலில் சகுனி என்று கருதப்படும் - மொட்டுக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் - பஸில் ராஜபக்ஷ தன் கைவரிசையை மீண்டும் ஆரம்பித்து விட்டார் எனத் தெரிகின்றது.

2020இல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசு பொருளாதார நெருக்கடிகளில் தடுமாறிய போது அச்சமயம் வெளிநாட்டில் இருந்த 'ஏழு மூளை' வலிமை கொண்ட பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பி, தமது அபார மூளையினால் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பார் என்று மொட்டுக் கட்சிக்காரர்கள் பலரும் அப்போது பீற்றிக்கொண்டார்கள்.

அப்படி வந்த பஸிலுக்கு இடம் அளிப்பதற்காக அப்போது பிரதமராகவும் இருந்த மஹிந்த ராஜபக்ஷ தமது நிதி அமைச்சர் பதவியை விட்டுக் கொடுக்க வேண்டியவரானார். அப்படிக் கொடுத்தும் என்னவாயிற்று?

'ஏழு மூளைக்காரரினால்' நாட்டின் வரவு - செலவுத் திட்டத்தைக் கூட நாடாளுமன்றத்தில் முழுமையாகச் சமர்ப்பிக்க - வாசிக்க - ஒப்பிக்க - முடியவில்லை. தடுமாறினார். இடையில் ஓய்வு கொடுக்க வேண்டியும் நேர்ந்தது. மருந்தெடுக்க வேண்டியும் இருந்தது. தட்டுத் தடுமாறி அவர் ஒப்புவித்த வரவு - செலவுத் திட்டமும் நாட்டையும் தட்டு தடுமாறவே வைத்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டுத் 'தப்பினோம், பிழைத்தோம்' என்று ஓடித் தப்ப வைக்கும் நிலையையும் அது ஏற்படுத்தியது.

மஹிந்த ராஜபக்ஷ 2010 இல் தாம் எதிர்கொண்ட இரண்டாவது ஜனாதிபதி தேர்தலில் 18 லட்சம் மேலதிக வாக்குகளைப் பெற்று பெருவெற்றியீட்டினார். அந்த இரண்டாவது பதவிக்காலத்தில் ஆறு ஆண்டுகள் - 2016 வரை - அதிகாரத்தில் இருக்கக்கூடிய வாய்ப்பு அவருக்கு இருந்தது. எனினும் மூன்றாவது முறைக்கான தேர்தலை ஒரு வருடம் முந்தி நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நெட்டித் தள்ளியவர் பஸில் ராஜபக்ஷதான். அடுத்த நிலையில் - மஹிந்தவுக்கு அடுத்து - ஜனாதிபதி பதவிக்குத் தான் வரும் சுயநலத்தினால்தான் அப்படி பஸில் ராஜபக்ஷ அவசரப்பட்டு காய் நகர்த்தினார் என்று கூறப்படுகிறது.

ஆனால், மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவின் தோல்வியை அடுத்து பஸில் ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பியோட, அந்த இடத்துக்குள் வந்து புகுந்து விட்டார் பஸிலின் மற்றைய அண்ணனான கோட்டாபய ராஜபக்ஷ.

கோட்டாபயவின் முகத்தைக் காட்டி வெற்றியீட்டிய பின்னர் ஜனாதிபதிப் பதவியை அவரிடம் இருந்து கைப்பற்றுவது பஸிலின் திட்டமாக இருந்தது என்று கோட்டாபயவுக்கு அச்சமயத்தில் மிக நெருக்கமாக இருந்த திலித் ஜயவீர போன்ற சிலர் இப்போது தகவல் வெளியிடுகின்றனர். இப்போது ரணில் விக்கிரமசிங்க இருக்கின்ற இடத்தை, கோட்டாவிடம் இருந்து தான் கைப்பற்றிக் கொள்ளவே அரசியல் சகுனித்தனங்களை பஸில் பண்ணினார் என்றும், அவை பிழைத்து பந்து ரணிலின் களத்துக்குள் அடிக்கப்பட்டு விட்டது என்றும் கூறுகின்றார் ஊடக முதலாளியான திலித் ஜயவீர .

இப்போது ரணிலுக்கு எதிராகவும் தன் சகுனித்தனங்களை ஆரம்பித்து விட்டார் பஸில். அதற்கான துருப்புச் சீட்டுத்தான் அவர் அறிமுகப்படுத்தியுள்ள மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் வர்த்தகக் கோடீஸ்வரர் தம்மிக பெரேரா.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜனப் பெரமுனவின் வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தெரிவு செய்யாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் இராஜதந்திர வேலையை பஸில் கனகச்சிதமாக ஆரம்பித்து விட்டார் என அறிய முடிகிறது.

ஜனாதிபதி வேட்பாளராக தெரிவுசெய்யப்பட வேண்டுமாயின் பத்து நிபந்தனைகளை - முக்கியமாக பொருளாதாரக் கோட்பாடுகள் சார்ந்த பத்து அம்சங்களை - தம்மிக்க பெரேரா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அந்தப் பத்து நிபந்தனைகளுக்கான தீர்வையும் தேர்தலுக்கு முன்னர் முன்மொழிய வேண்டும் என்றும் பொதுஜன பெரமுன சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பஸிலின் நகர்த்தல் நடவடிக்கை என்கின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்.

தம்மிக்க பெரேராவுக்கு அனுப்பப்பட்ட நிபந்தனைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்புக்கும் பொதுஜன பெரமுனவால் அனுப்பப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது கடைப்பிடிக்கும் அவரின் தாராளவாதப் பொருளாதாரப் போக்குக்கு மாறான அடிப்படைகளைக் கொண்ட இந்தப் பத்து நிபந்தனைகளும் ஜனாதிபதி ரணிலை அதிருப்திக்கு உள்ளாக்கும் வகையிலும், பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க இல்லை என்பதை மறைமுகமாகத் தெரிவிக்கும் நோக்கிலுமே முன் வைக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

அரசியல் சகுனியான பஸிலுக்கு நரித்தந்திரசாலியான ஜனாதிபதி ரணில் என்ன பதிலடி கொடுக்கப் போகின்றார்? அது இனித்தான் தெரியவரும்.

### கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு

# நூறு கோடி ரூபாவை நன்கொடையாக வழங்கிய பிரபல தொழிலதிபர் நஹில்





இலங்கையின் பிரபல தொழிலதிபர் நஹில் விஜேசூரிய, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் லிட்டில் ஹார்ட்ஸ் திட்டத்துக்கு ஒரு பில்லியன் நூறு கோடி ரூபா நிதியை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

நஹில் விஜேசூரிய, ஈஸ்ட் வெஸ்ட் கம்பனியின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி அவர்.

அவர், வெலிகம முன்னாள் மேயர் ரெஹான் ஜெயவிக்ரமவின் மாமனாரும் ஆவார்.

# ஊழலுக்கு எதிராக மக்கள் படை திரட்டுகின்றார் ரொஷான் எம்.பி.



அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க, ஊழலுக்கு எதிராக மக்கள் இயக்கமொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் திட்டமிட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன எனவும், ஜனவரியில் அமைப்பு உதயமாகவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டில் ஊழல் தலைவிரித்தாடுகின்றது எனச் சுட்டிக்காட்டி, அதிரடியான சில நடவடிக்கைகளை விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த ரொஷான் ரணசிங்க முன்னெடுத்தார்.

அவரின் நடவடிக்கைகளால் ஆளுந்தரப்புக்கும், அவருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. இதனையடுத்து அமைச்சுப் பதவியில் இருந்து ரொஷான் ரணசிங்க நீக்கப்பட்டார்.

இந்நிலையிலேயே புதியதொரு அரசியல் பயணத்தை அவர் ஆரம்பிக்கவுள்ளார்.

# தந்தை பணம் கொடுக்காததால் உயிர்மாய்த்த 20 வயது இளைஞர்

## அச்சுவேலியில் சோகம்



யாழ்ப்பாணத்தில் தந்தை பணம் கொடுக்காததால் இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

செல்வச்சந்நிதி கோயில் வீதி, கதிரிப்பாய், அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இளைஞரின் தந்தை ஆஸ்திரேலியாவில் வசித்து வரும் நிலையில், இளைஞர் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயில்வதற்காகத் தந்தையிடம் பணம் கேட்டுள்ளார்.

தந்தை தனக்குப் பணம் கொடுக்க மறுத்த காரணத்தால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அந்த இளைஞர் வீட்டில் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இளைஞரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் நேற்று அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# விஜயகாந்துக்கு பொது இடத்தில் சிலை: தமிழக அரசிடம் பிரேமலதா கோரிக்கை!



மறைந்த தே.மு.தி.க. நிறுவனத் தலைவரும், நடிகருமான விஜயகாந்துக்கு பொது இடத்தில் சிலை மற்றும் மணிமண்டபம் அமைக்க வேண்டும் என தமிழக அரசுக்கு தேமுதிக பொதுச் செயலாளரும், விஜயகாந்தின் மனைவியுமான பிரேமலதா கோரிக்கை விடுத்துள்ளார்.

கோயம்பேடு கட்சி அலுவலகத்தில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் இன்று அவரது குடும்பத்தினர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

இதனை தொடர்ந்து பிரேமலதா பேசுகையில்,

”விஜயகாந்தின் நினைவிடத்தில் தினம்தோறும் பூஜைகள், அலங்காரங்கள் செய்யப்படும். பொதுமக்கள் யார் வேண்டுமானாலும் வந்து அஞ்சலி செலுத்தலாம்.

இறுதி ஊர்வலத்தில் மிகப் பெரிய ஒத்துழைப்பு கொடுத்த தமிழக அரசுக்கும், முதல்வர் ஸ்டாலினுக்கும், ஆளுநர் ரவிக்கும், ஆளுநர் தமிழிசைக்கும், அனைத்துக் கட்சி தலைவர்களுக்கும், திரையுலகை சேர்ந்தவர்களுக்கும் நன்றி சொல்லிக் கொள்கிறேன். இதேபோல் நேரிலும், தொலைபேசி வழியாகவும் இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் தலைவணங்கி நன்றித் தெரிவித்து கொள்கிறேன்.

விஜயகாந்துக்கு பொது இடத்தில் சிலை மற்றும் மணிமண்டபம் அமைக்க வேண்டும் என தமிழக அரசிடம் கோரிக்கை வைத்துள்ளோம். தமிழக அரசு நிச்சயம் செய்துகொடுக்கும் என்று நம்புகிறோம்” என்று கூறினார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1,500 பேருக்கு நடிகர் விஜய் நேரில் சென்று உதவி வழங்கினார்



திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1500 பேருக்கு நடிகர் விஜய் நிவாரண உதவிகளை வழங்கினார்.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த 17, 18 ஆம் திகதிகளில் பெய்த அதி கனமழையால் பல்வேறு இடங்களை வெள்ளம் சூழ்ந்தது.

தாமிரபரணி கரையோர பகுதிகளில் குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்ததால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர். தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களும் தனித்தீவுகளாக மாறியிருந்தன. வெள்ளத்தில் சிக்கியவர்கள் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விஜய் மக்கள் இயக்கம் சார்பில் நிவா ரண உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பாளையங்கோட்டை கேடிசி நகரிலுள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் நடிகர் விஜய் பங்கேற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கினார். நிவாரண உதவிகளை வழங்குவதற்காக இரு மாவட்டங்களில் இருந்து பாதிக்கப்பட்டவர்கள் 1,500 பேருக்கு டோக்கன் வழங்கப்பட்டு, அவர்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

தூத்துக்குடி வெள்ளப்பெருக்கின்போது பாத்திமா நகரை சேர்ந்த ராபின் சிங் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். அவரது குடும்பத்தினரை போனில் தொடர்பு கொண்டு ஏற்கனவே விஜய் ஆறுதல் தெரிவித்திருந்தார். ராபின் சிங் குடும்பத்தினருக்கு ஒரு லட்சம் ரூபா நிவாரண நிதியை விஜய் வழங்கினார்.

இதுபோல் வீடுகளை இழந்த வள்ளி, இசக்கி ஆகியோருக்கு தலா 50 ஆயிரம் ரூபா, சங்கரன் என்பவருக்கு 25 ஆயிரம் ரூபா மற்றும் வீடுகள் சேதம் அடைந்ததில் பாதிக்கப்பட்டுள்ள 30 பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா பணத்தையும் விஜய் வழங்கினார். மேலும் 5 கிலோ அரிசி, சீனி, ரவை, கோதுமை, சேமியா, உப்பு உள் ளிட்ட மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு மற்றும் வேட்டி, சட்டை, துண்டு ஆகியவற்றை 1,500 பேருக்கு விஜய் வழங்கினார். நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு வடை, பாயாசத் துடன் விருந்தும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை முடித்து கொண்டு மண்டபத்திலிருந்து விஜய் கிளம்பியபோது புகைப்படம் எடுக்க பலர் முண்டியடித்தனர். இதனால் அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் சிலருக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கு மெக்சிகோவில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் 6 பேர் உயிரிழப்பு



வடக்கு மெக்சிகோவில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மெக்சிகோவில் உள்ள சோனோரா மாகாணம் சியுடாட் ஒப்ரெகன் நகரில் இடம்பெற்ற விருந்து நிகழ்ச்சி ஒன்றிலேயே இவ்வாறு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த சம்பவத்தில் 26 பேர் வரை காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருந்து நிகழ்ச்சிக்கு இடைநடுவே வந்த சிலர் திடீரென துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். சரமாரியாக மேற்கொள்ளப்பட்ட இந்த துப்பாக்கி பிரயோகத்தினால் பல்வேறு பொருள் சேதங்களும் ஏற்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 100 பேர் பலி!



காசாவில் கடந்த 24 மணித்தியாலங்களில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 100 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 158 பேர் வரை காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, முற்றுகையிடப்பட்ட காசா பகுதியில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உணவு, உடை மற்றும் சுகாதாரப் பொருள்கள் உள்ளிட்ட பொருள்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கான அமைப்பு அறிவித்துள்ளது.

அத்துடன், உலக உணவுத்திட்டம் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து 14 ஆயிரத்துக்கும் அதிகமான காசாவில உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இம்ரான் கானின் வேட்புமனு நிராகரிப்பு!

அடுத்த வருடம் பொதுத் தேர்தலில் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுவதற்கு பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தாக்கல் செய்த வேட்பு மனுவை பாகிஸ்தான் தேர்தல் ஆணைக் குழு நிராகரித்துள்ளது.

71 வயதுடைய முன்னாள் பிரதமர் இம்ரான் கான் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதன்பின்னர், அவர் அரசியல் மற்றும் சட்டரீதியான பல சிக்கல்களை எதிர்கொண்டார்.

இந்த நிலையில், அவர் நேற்று முன் தினம் தேர்தலுக்கான வேட்புமனுவை தாக்கல் செய்தார் என அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இரண்டு தொகுதிகளின் வேட்பாளர்களின் பட்டியலில் இருந்து இம்ரான் கானின் பெயரை பாகிஸ்தான் தேர்தல் ஆணைக்குழு நீக்கியுள்ளது.






# மலையக மக்களை கௌரவித்து இந்தியாவில் முத்திரை வெளியீடு

(அபு அலா)

இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டும் அவர்களுக்கான அங்கீகாரத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் நேற்று சனிக்கிழமை புதுடில்லியில் ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆலோசனையின் பேரிலும் தமிழக பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் கே.அண்ணாமலையின் ஏற்பாட்டிலும் மலையக மக்களை கௌரவிக்கும் வகையில் இந்திய தபால் துறை அமைச்சினூடாக இந்த நினைவுத் தபால் தலை வெளியிடப்பட்டு, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி தமிழர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வின்போது, பாரதீய ஜனதா கட்சியின் தேசியத் தலைவர் ஜே.பி. நடாவால், இலங்கையின் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கு நினைவுத் தபால்தலை கையளிக்கப்பட்டது.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்கு இடம்பெயர்ந்தமை தொடர்பான நூற்றுக்கணக்கான ஆவணங்கள், கோப்புகள் பரிசீலிக்கப்பட்டு, உரிய வரலாற்றுச் சுவடுகளோடு இந்த முத்திரையை வெளியிடுவதற்கு இந்திய தபால்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

இதன் மூலம் இலங்கைக்கு இடம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்பிலான வரலாறு இந்தியர்களுக்கு எளிதில் எடுத்துரைக்கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்து பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், சீனா, ஈரான், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பூட்டான் உள்ளிட்ட 210க்கும் மேற்பட்ட நாடுகளில் கிட்டத்தட்ட 32,285,425 இந்திய வம்சாவளி மக்கள் வசித்து வருகின்ற போதிலும், இலங்கையில் 200 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்காக முத்திரை வெளியிடப்பட்டுள்ளமை மலையக மக்களுக்கு அளிக்கப்படும் மரியாதையாகவே பார்க்கப்படுகிறது.



# மீண்டும் ரயில் தடம் புரள்வினால் மலையக ரயில் சேவை பாதிப்பு

(மஸ்கெலியா நிருபர்)

தலவாகலைக்கும் வட்டகொடையிற்கும் இடையில் சரக்கு ரயில் தடம் புரண்டதன் காரணமாக மலையகப் பகுதிக்கான ரயில் போக்குவரத்து நேற்று முதல் தடை பட்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில்வேக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக இந்தப் பாதையில் ஏனைய ரயில் சேவைகள் தாமதமாகும் என ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

கண்டியில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த சரக்கு ரயிலே இவ்வாறு தடம் புரண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மலையக பகுதிகளில் ரயில்கள் தடம் புரண்டு வருகின்றன. பயணிகள் அதிகளவில் போக்குவரத்துக்காக தற்போது ரயிலையே தேர்வு செய்து உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ரயில்கள் அடிக்கடி தடம் புரண்டு வருவது நாச செயலாக இருக்கும் என பயணிகள் சந்தேகம் கொள்கின்றனர் இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர். இனியும் மலையகப் பகுதிகளில் அடிக்கடி ரயில்கள் தடம் புரளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்கள் நலன் பேண முன் வர வேண்டும் எனவும் கோரப்படுகின்றது.

# சுனாமி முன்னெச்சரிக்கைக்கான கோபுரங்கள் வடக்கில் 14 இல் 2 மட்டுமே இயங்கு நிலையில்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.31

இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள 77 சுனாமி முன்னெச்சதிக்கைக் கோபுரங்களில் 57 கோபுரங்கள் இயங்கவில்லை எனக் கண்டுகொள்ளப்பட்டுள்ளதோடு வடக்கில் உள்ள 14 கோபுரங்களில் இரண்டு மட்டுமே இயங்குகின்றன என அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவிக்கின்றது.

இலங்கையில் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட (சுனாமி) ஆழிப் பேரலை காரணமாக பாரிய உயிரிழப்புக ஏற்பட்டமையை அடுத்து, சுனாமி வரக் கூடிய சமயங்களில் முன் ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்த முன் ஆயத்த கோபுர அமைப்பு முறைகள் ஏற்படுத்தப்பட்டன.

நாடு முழுவதும் இத்தகைய 77 கோபுரங்கள் அமைக்கப்பட்டன. யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா 5 கோபுரங்களும், மன்னாரில் 3 கோபுரங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒன்றும் என 14 கோபுரங்கள் வடக்கில் உள்ள போதும் அவற்றில் இரண்டு கோபுரங்கள் மட்டுமே இயங்கு நிலையில் இப்போது உள்ளன என்று கூறப்படுகின்றன.

இதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நெடுந்தீவு, மணல்காடு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் உடுத்துறை ஆகிய இடங்களில் இவை அமைக்கப்பட்டுள்ளபோதும் மணல்காடு கோபுரம் மட்டுமே இயங்கு நிலையில் உள்ளது.

கிளிநொச்சியில் வலைப்பாட்டில் உள்ளபோதும் அது இயங்கவில்லை.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பலவன்பொக்கணை, முள்ளிவாய்க்கால், முல்லைநகர், அளம்பில் மற்றும் கொக்குளாய் ஆகியவற்றில் உள்ள ஐந்து கோபுரங்களும் இயங்கவில்லை.

மன்னாரில் தலைமன்னார், வங்காலை மற்றும் சிலாவத்துறை ஆகிய இடங்களில் இக்கோபுரங்கள் உள்ள போதும் அவற்றுள் வங்காலை கோபுரம் மட்டும் இயங்கு நிலையில் உள்ளது.



# ஜனவரி முதல் நீர் கட்டணம் 3 வீதத்தால் உயர்கின்றது!

நாளை, 2024 ஜனவரி மாதம் முதல் நீர் கட்டணங்கள் 3 வீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளன என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

பெறுமதி சேர் வரி அதிகரிப்பினால், 3 வீத மேலதிக வரி, நீர் கட்டணப் பட்டியலில் உள்ளடக்கப்படவுள்ளதாக அதன் பிரதிப் பொது முகாமையாளர் பியல் பத்மநாத கஜவீர ஆரச்சி குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, நீர் கட்டணங்கள் உயர்வடையவுள்ளன. இதுவரை நீர் கட்டணங்களுக்கு 15 வீத பெறுமதி சேர் வரி விதிக்கப்பட்டு வந்தது.




# தபால் கட்டணங்களை மீளாய்வு செய்ய திட்டம்

2024 ஆம் ஆண்டில் தபால் கட்டணத்தை மீளாய்வு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பே இதற்குக் காரணம் எனத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# போக்குவரத்துக் கட்டணங்களையும் அதிகரிப்பது தொடர்பில் அவதானம்

பெறுமதி சேர் வரி (வற்) அதிகரிப்பினையடுத்து போக்குவரத்துக் கட்டணங்களையும் மறுசீரமைப்பது தொடர்பில் பஸ், பாடசாலை போக்குவரத்து சேவை, ஓட்டோ உரிமையாளர்கள் அவதானம் செலுத்தியுள்ளனர்.

இதற்கமைய, வற் அதிகரிப்புக் காரணமாக குறைந்தபட்ச பஸ் கட்டணங்கள் 35 ரூபா வரை அதிகரிக்கப்பட வேண்டுமென அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

டீசலுக்கு வற் விதிக்கப்பட்டுள்ளமையினால், ஜனவரி மாதம் முதல் அதன் விலை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக சங்கத்தின் பிரதான செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

இதனால் பஸ் கட்டண திருத்தத்தை மேற்கொள்வது கட்டாயமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், டீசலின் விலை அதிகரிக்கப்படுமாயின், பாடசாலை போக்குவரத்து சேவைகளின் கட்டணங்களும் அதிகரிக்கப்படுமென, அகில இலங்கை பாடசாலை மாணவர்கள் போக்குவரத்துச் சங்கத்தின் செயலாளர் மல்ஸ்ரீ டி சில்வா தெரிவித்துள்ளார்.

வற் அதிகரிப்பினால் தமது தொழிலை முன்கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படுமாயின், ஓட்டோக் கட்டணங்களை மறுசீரமைப்பது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானிக்கப்படுமென ஓட்டோ உரிமையாளர்களின் சங்கங்கள் தெரிவித்துள்ளன.



# மேலும் 60 லட்சம் முட்டைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி

இந்தியாவில் இருந்து மேலும் 60 லட்சம் முட்டைகள் நாட்டிற்கு இன்று கொண்டுவரப்படவுள்ளன என அரச வணிகக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

மேற்படி முட்டைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளன என அதன் தலைவர் ஆசிரி வலிசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சியான முட்டை இறக்குமதியினால், சந்தையில் முட்டைகளின் விலைகள் குறைவடைந்து வருகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




# நாட்டின் பணவீக்கம் டிசம்பரில் அதிகரிப்பு

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில், டிசம்பர் மாதத்தில் பணவீக்கம் அதிகரித்துள்ளது.

இந்த வருடம் நவம்பரில் 3.4 வீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் டிசம்பரில் 4 வீதமாக அதிகரித்துள்ளது என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் வருடாந்த புள்ளி மாற்றத்தின் அடிப்படையில், மாதாந்தம் பணவீக்கம் கணக்கிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி மகளிர் அணி

# ஜனநாயக வாக்கெடுப்பின் மூலம் நிர்வாகிகள் தெரிவு



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணி புதிய நிர்வாகத் தெரிவு நேற்று இடம்பெற்றது.

கட்சியின் கொள்கையின் அடிப்படையில் ஜனநாயக ரீதியிலான வாக்கெடுப்பின் மூலம் தலைவி மற்றும் ஏனைய உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் எனக் கட்சியின் செய்திக் குறிப்பு தெரிவித்தது. இதில் தலைவராக திருமதி ரஞ்சினி கனகராசா, செயலாளராக திருமதி ரஜனி ஜெயப்பிரகாஷ், பொருளாளராக திருமதி கந்தையா கலைவானி, உபதலைவராக திருமதி கௌரி தயாளகுமார், உப செயலாளராக திருமதி தேவமணி ஆகியோருடன் நிர்வாக உறுப்பினர்கள் சகல பிரதேச பிரிவு ரீதியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலோசகராக திருமதி பிரபா செல்வராசா (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் பொன். செல்வராசாவின் துணைவியார்) ஆகியோர் தெரிவானார்கள்.

இதன் பின் மகளிர் அணியினதும் கட்சியினதும் எதிர்கால திட்டங்கள் பற்றிய கலந்துரையாடலும் இடம்பெற்றது.






















# தேசிய மக்கள் சக்தியின் மகளிர் அணியின் மாத்தறை மாவட்ட தேசிய எழுச்சி மாநாடு

ஜனதா விமுக்தி பெரமுனவையும் (ஜே.வி.பியையும்) உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் மகளிர் அணியின் மாத்தறை மாவட்ட தேசிய எழுச்சி மாநாடு நேற்று ஜே.வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவின் தலைமையில் மாத்தறையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.












# களுத்துறை சிறையில் கைதி உயிரிழப்பு: விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

களுத்துறைச் சிறைச்சாலையில் கைதிகள் இருவர் இடையிலான மோதலின் போது கீழே வீழ்ந்து கைதி ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, உயிரிழந்த கைதியின் மரபணு மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும், சம்பவம் தொடர்பில் கைதிகளிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

திருட்டு சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரே கடந்த 26 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

46 வயதான மேற்படி நபர், மோல்காவ பகுதியை சேர்ந்தவராவார்.

மற்றுமொரு கைதியுடன் ஏற்பட்ட மோதலின் போது கீழே வீழ்ந்த அவர், நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.



# கொழும்பு மாநகரத்தில் இன்று விசேட போக்குவரத்துத் திட்டம்

கொழும்பில் இன்று ஞாயிற்றுக் கிழமை விசேட போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார்.

புத்தாண்டுக் கொண்டாட்டங்களை முன்னிட்டு இன்றைய தினம் கொழும்பு நகரில் ஏற்படக்கூடிய வாகன நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில் இன்று மாலை 5 மணி முதல் இந்த போக்குவரத்துத் திட்டம் காலிமுகத்திடல் உள்ளிட்ட பகுதிகளில் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.12.2023

## மேஷம்

இன்று தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். இதிலிருந்து பயனுள்ளதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலைத் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். இன்று சூழ்நிலை அந்தளவு சாதகமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை ஏற்படும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வெற்றிகரமாக ஏற்படுத்த அனுசரித்து போகும் அணுகுமுறை தேவை.

ஆன்மீக நோக்கத்துக்கும் பயணத்துக்கும் பணத்தை செலவு செய்வீர்கள். இதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

கண்ணுக்கான சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பல்வலிக்கான வாய்ப்பும் உள்ளது.

## ரிஷபம்

நீங்கள் எடுக்கும் முயற்சியில் தடைகளைக் காண்பீர்கள். அதிக சிந்தனையை தவிர்க்க வேண்டும் உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். இன்றைய சூழ்நிலையை சமாளிப்பதை சற்று கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மோதல் நேரலாம். அமைதியாகவும் சூழ்நிலைக்கேற்றவாறும் இருந்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணம் போதுமானதாக காணப்படாது. பணம் இழந்துவிடுவோமோ என்ற பயம் உங்களிடம் காணப்படும்.

முதுகுவலி ஏற்பட வாயுப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.

## மிதுனம்

இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கலாம். உங்கள் நண்பர்களை வெல்வீர்கள். இது பயன் தரத் தக்கதாக இருக்கும். நேர்மறையான மன நிலையோடு இன்றைய தினத்தில் செயல்களை மேற்கொள்வீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணியில் உங்களை மேம்படுத்திக்கொள்ள மிகுந்த வாய்ப்புகள் கிடைக்கும். உங்களுக்கு நற்பெயர் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராமரிப்பீர்கள். நேர்மையான அணுகுமுறை மூலம் இது சாத்தியமாகும்.

பணம் அதிக அளவில் காணப்படும். சாதுர்யமாக பணத்தை செலவு செய்ய இன்றைய நாளை பயன்படுத்துவீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும்.

## கடகம்

இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். வேதனைப்படும் சூழ்நிலைகள் உருவாகும். நண்பர்களின் ஆதரவு குறையும். சற்று கவனமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. இதனால் கவலை ஏற்படும்.

உங்களின் அமைதியற்ற மனநிலை உறவை பாதிக்கும். நல்ல புரிந்துணர்வுக்கு உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று சிறிதளவு பணமே காணப்படும். அதிகமாக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். வீட்டின் புனரமைப்புக்கான செலவாக அது இருக்கலாம்.

இன்று காய்ச்சலுக்கு ஆளாக நேரலாம். ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை.

## சிம்மம்

இன்று பொறுப்புகளை அதிகமாக சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். என்றாலும் உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் இதனை சமாளிப்பீர்கள்.

கடின உழைப்பு காணப்படுகின்றது. என்றாலும் நீங்கள் வெற்றி பெற இயலாது. முறையாக திட்டமிடாததே இதற்கு காரணமாக இருக்கும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இந்த உணர்வு உங்கள் உறவை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு இருக்காது. நிதிநிலையை நன்கு பராமரிக்க வேண்டும். லாபமும் இருக்காது. நஷ்டமும் இருக்காது.

இன்று பதட்டம் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் அதன் தாக்கம் காணப்படும். எனவே அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

## கன்னி

இன்று சில சாதகமற்ற பலன்கள் கிடைக்கும். உங்கள் வாழ்வில் சில மாற்றங்களை சந்திப்பீர்கள். பயணங்கள் காணப்படும். தெளிவான மனதுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணி நிமித்த பயணம் காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். இதனால் உறவில் புரிந்துணர்வை பாதிகாக்க முடியும்.

இன்று பண வரவு குறைவாக காணப்படும். குடும்பத்திற்காக உங்களிடம் உள்ள பணத்தை செலவு செய்வீர்கள்.

தூக்கப் பிரச்ச்சினை காரணமாக இன்று உங்களிடம் பதட்டம் காணப்படும்.

## துலாம்

உங்கள் மகிழ்ச்சி மற்றும் சௌகாரியங்களை வளர்த்துக் கொள்வீர்கள். என்றாலும் சில தடைகளை நீங்கள் சந்திப்பீர்கள். உங்கள் புத்திசாலித் தனத்தை வளர்த்துக்கொள்ள இன்றைய நாளைப் பயன்படுத்துங்கள்.

சில தடைகளுக்குப் பிறகு வெற்றி காண்பீர்கள். திட்டமிட்டுச் சிறப்பாகப் பணியாற்றினால் இன்று உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் வாய்ப்பு உள்ளது. நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். சிறு கடன் வகையில் இன்று பண வரவு காணப்படும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சனை ஏதும் காணப்படாது.

## விருச்சிகம்

இன்று சிறப்பான நாள். எதிர்பாராத நன்மைகள் ஏற்படும் நாள். உங்கள் சமயோசித புத்தி மூலம் இன்றைய நாளை கழிப்பீர்கள்.

உங்கள் பனியின் தரம் மேலதிகாரிகளால் பாராட்டப் படும். பணிகளை ஆற்றும் போது உங்கள் அணுகுமுறையில் வேகம் காணப்படும்.

இன்று மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இன்றைய நாளையும் மகிழ்ச்சியாக்குவீர்கள்.

பணபுழக்கம் போதுமானதாக இருக்கும். காப்பீடு மற்றும் பூர்வீக சொத்து மூலம் உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். எனவே ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.12.2023




இன்று வெற்றி காண்பதற்கு அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டியது அவசியம். அவசர முடிவுகள் இன்று எந்தப் பயனையும் அளிக்காது.

பணியில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் சரியாக திட்டமிட வேண்டும். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கண்டிப்பும் கறாருமாக இருப்பீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். சகஜமான அணுகுமுறை மூலம் உறவில் நெருக்கம் காணலாம்.

பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று ஆக்கப்பூர்வமான நாளாக இருக்கும். திறமை மூலம் நல்ல பலன்களைப் பெறலாம். நீண்ட கால திட்டங்களுக்கு இன்றைய நாளைப் பயன்படுத்தலாம். ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமையை வெளிப்படுத்தும் நாள். இன்று அபாரமான திறமையை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று அன்பிற்கும் காதலுக்கும் உரிய நாள். உங்கள் நகைச்சுவை மற்றும் காதல் உணர்வு மூலம் உங்கள் பிரியமானவரை மகிழ்விப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் நிதி மற்றும் பயனுள்ள முதலீடு பற்றி இன்று விரைந்து முடிவெடுப்பீர்கள்.




உங்கள் அவசரப் போக்கு காரணமாக இன்று நீங்கள் பல வாய்ப்புகளை இழக்க நேரும். புத்திசாலித்தனமாக இருப்பது நல்லது. விவேகத்துடன் நடந்து கொள்வது நல்லது.

பணியிடத்தில் இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். பணியை இழப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்களிடம் பாதுப்பின்மை உணர்வு காணப்படும். இதை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வு இந்நாளின் மகிழ்ச்சியைப் பாதிக்கும்.

உங்கள் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக பணத்தை இழப்பீர்கள். இன்று நிதி வளர்ச்சி காண்பது கடினமாக இருக்கும்.

பதட்டம் காரணமாக இன்று முதுகுவலி காணப்படும்.




இன்று நீங்கள் எடுக்கும் முயற்சியில் நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களுக்கு வெற்றி எளிதில் நிச்சயம் கிடைக்கும்.

இன்று பணிகள் சுமுகமாக நடக்கும். பணியில் முன்னேற்றம் காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வளர்த்துக் கொள்வீர்கள். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள இது உதவும்.

பணம் அபரிமிதமாக காணப்படும். ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் பண வரவிற்கு வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.







# யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை: நாட்டில் மேலும் 1,554 பேர் கைது!

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் யுக்திய விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையில் மேலும் 1,554 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் பிடியாணை உத்தரவுக்கிணங்க 82 பேரிடம் விசாணைகள் மேற்கொள்ளப்படவுள் ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சட்ட விரோத சொத்து விவகாரம் தொடர்பில் 2 பேர் விசாரிக்கப்படவுள்ளனர்.

மேலும், இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 590 கிராம் ஹெரோயின், ஒரு கிலோ 300 கிராம் ஐஸ், 6 கிலோ 330 கிராம் கஞ்சா உள்ளிட்ட வேறு சில போதைப்பொருள் வகைகளும், போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கைதானவர்களில் போதைக்கு அடிமையான 62 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் அரங்கு இன்று!



தமிழ்த்தேசியபசுமை இயக்கத்தின் சமகால அரசியல் அரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் உப்புமடச் சந்தியில் அமைந்துள்ள வேதபாராயண சனசமூக நிலையத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வுரையரங்கில் "தமிழ் அரசியல் நோக்கு நிலையில் இருந்து....!" என்பதைத் தொனிப்பொருளாகக் கொண்டு உரைகள் இடம்பெறவுள்ளன.

வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.வி.சுப்பிரமணியம் 'உத்தேச கடற்சட்டத் திருத்தவரைவு'என்னும்தலைப்பிலும்,அரசியல்ஆய்வாளர் நிலாந்தன் 'புத்தாண்டை எதிர்கொள்ளுதல்' என்னும் தலைப்பிலும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம் 'இமாலயப் பிரகடனம்' என்னும் தலைப்பிலும் தமிழ் அரசியல் நோக்கு நிலையில் இருந்து உரையாற்றவுள்ளனர்.



# புத்தளம் கருவலகஸ்வெவ வயலில் காயமுற்று வீழ்ந்த நிலையில் யானை

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் கருவலகஸ்வெவ பிரதேச செயலகத்திற்குற்பட்ட கூர்க்கெ-கட்டியாவ பகுதியில் தனியார் ஒருவரின் வயலில் வீழ்ந்த நிலையில் காட்டு யானையொன்று உயிருடன் காணப்படுவதாக கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த யானையின் பின் கால்கள் இரண்டும் உடைந்திருக்கலாமென வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சந்தேகிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த யானைக்கு சிகிச்சையளிப்பதற்கு மிருக வைத்தியர் வரவழைக்கப்படவுள்ளார் என கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர்.

இந்தக் காட்டு யானைக்கு சுமார் 30 வயது இருக்கும் என வனஜீ-வராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# யுனைடெட் டிரவல்ஸ் அன்ட் ஹொலிடேஸ் லிமிடெட் புதிய இலச்சினையை அறிமுகம்




இலங்கையின் ஹஜ் மற்றும் உம்ரா சேவை வழங்குவதில் முன்னணி நிறுவனமான யுனைடெட் டிரவல்ஸ் அன்ட் ஹொலிடேஸ் (பிரைவேட்) லிமிடெட் தனது புதிய இலச்சினையை அறிமுகம் செய்துள்ளது.

இதுதொடர்பான நிகழ்வு கொழும்பில் உள்ள பிரபல தனியார் ஹோட்டலில் இடம்பெற்றிருந்தது.

இலங்கையின் ஹஜ் மற்றும் உம்ரா சேவை வழங்குவதில் கடந்த 6 வருடங்களாக தனக்கான ஒருவழியில் யாத்திரியர்களின் அமோக ஆதரவுடன் நாடளாவிய ரீதியில் சேவையை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம் இதுவாகும்.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட இலச்சினை, ஒரு விமானத்தின் ஜன்னல் பகுதி இருப்பதுடன், அது ஆங்கில எழுத்து யூ வடிவத்தையும், அந்த ஜன்னலுகுள் இருந்து பார்க்கும் போது விமானத்தின் பின் பகுதி போன்ற வடிவமைப்பு ஆங்கில எழுத்து ‘டி’ வடிவத்தை கொண்டுள்ளது. இலச்சினையின் தோற்றத்தில் பல வர்ணங்கள் அடங்கியுள்ளன.

அந்த நிறங்கள் ஒற்றுமை, அரவணைப்பு, அன்பு மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன.

யுனைடெட் டிரவல்ஸ் அன்ட் ஹொலிடேஸ் (பிரைவேட்) லிமிடெட் சர்வதேச தரத்தில் தனது வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப, தனது சேவையை வழங்கி வருகிறது.

கடந்த பல வருடங்களாக இலங்கை மக்கள் மத்தியில் ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் அபிமான நம்பிக்கையை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அறிமுக நிகழ்வில், நிறுவனத்தின் ஊடாக சேவையை பெற்றவர்களுக்கான நினைவு சின்னங்கள் வழங்கிவைத்து கௌரவித்தமை நிறுவனத்தின் தரம், தனித்துவம் சிறப்பு மற்றும் புத்தாக்கத்தையும் எடுத்து காட்டுகின்றது.

பொருளாதார சிக்கலின் பின்னர் நாட்டில் உம்ரா கட்டணம் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்திருந்த வேளையில் அனைவருக்கும் உம்ரா எனும் தொனிப்பொருளில் கடந்த ஒக்டோபர் மாதம் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா எனும் சாதாரண கட்டணத்தில் அறிமுகம் செய்து உம்ரா துறையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தியது.

இலங்கையில் தற்போது உம்ரா சேவை துறையில் விலையை கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளதுடன், சந்தையில் விலையை நிர்ணயிக்கும் சக்தியாக இந்நிறுவனம் திகழ்கின்றது.

எதிர்காலத்தில் ஹஜ் கடமையை நிறைவேற்ற உள்ளவர்களுக்கான பல்வேறு சிறப்பம்சங்களை கொண்ட புதிய ஒரு பேகேஜை நிறுவனன் அறிமுகம் செய்யவுள்ளது எனவும் கூறப்பட்டது.







